ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 13.03.2017 |

## ரூபா 1 நாணயக் குத்தியினதும் ரூபா 5 நாணயக் குத்தியினதும் உலோகத்தினை/ கலப்பு உலோகத்தினை மாற்றுதல்

புதிதாக சுற்றோட்டத்திற்கு விடப்படவுள்ள ரூபா 1 நாணயக் குத்தியினதும் ரூபா 5 நாணயக் குத்தியினதும் உலோகங்கள்/ கலப்பு உலோகங்கள் பித்தளை முலாமிடப்பட்ட உருக்கிலிருந்து (தங்க நிறம்) துருப்பிடிக்காத உருக்கிற்கு (வெள்ளி நிறம்) மாற்றப்பட்டிருப்பது பற்றி பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. 5 ரூபா நாணயக் குத்தியின் விளிம்பிலுள்ள எழுத்துக்கள் புதிய துருப்பிடிக்காத உருக்கிலான குத்தியில் நீக்கப்பட்டுள்ளன. பரிமாணம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்ட மற்றைய அனைத்து விபரங்களும் 2005 இலிருந்து சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட ரூபா 1 மற்றும் ரூபா 5 நாணயக் குத்திகளை ஒத்ததாகவே தொடர்ந்தும் இருக்கும்.

குறிப்பிட்ட புதிய நாணயக் குத்திகள் கொடுப்பனவிற்காக இலங்கையில் சட்ட ரீதியான நாணயமாக இருக்குமென்பதுடன் சுற்றோட்டத்திலிருக்கும் பொழுது அவை இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகவும் இருக்கும்.

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01